தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## 'கணித்தமிழ் மூலம் வேளாண் அறிவியலை கழனி உழவனுக்கு கொண்டு செல்வோம்': துணைவேந்தர் முனைவர். கு.இராமசாமி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், தமிழ் இணையக் கல்விக் கழகமும், அறிவியல் தமிழ் இயக்கம், புதுடெல்லியும் இணைந்து நடத்திய வேளாண் கலைக் களஞ்சிய மூன்று நாள் பயிலரங்க தொடக்க விழா (மே மாதம் 26-28, 2016) இன்று (26.05.2016) காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக இராசி விதை அரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய முதன்மையர் (வேளாண்மை) தமது உரையில் "உழவர்களுக்கான அறிவியலை தமிழில் கொண்டு செல்லும்போது கலைச்சொற்களைப் பயன்படுத்துவதிலும், மொழி நடையிலும் எளிமையாக்கம் வேண்டும்" என்ற கருத்தை வலியுறுத்தினார்.

விழா நோக்கவுரை வழங்கிய வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் மு. முத்தமிழ்ச்செல்வன் அவர்கள் வேளாண் தமிழ் அறவியல் இயக்கத்தின் செயல்பாடும், குறிக்கோளும் அதில் மாணவர்களின் பங்கு எவ்வாறு உள்ளது என்றும் கூறினார்.

சென்னை தமிழ் இணையக் கல்விக் கழகம், கணித்தமிழ்ப் பேரவையின் மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் மா. தமிழ்ப்பரிதி அவர்கள் விக்கிபீடியாவில் 36-வது இடத்திலிருந்த தமிழ் கட்டுரைகள் இப்போது 6-வது இடத்திற்கு ஒரே வருடத்தில் உயர்ந்துள்ளது. இதில் மாணவர்களின் பங்கு, எதிர்காலத்தில் இணையத்தில் தமிழின் நிலை, முதல் இடத்திற்கு உயர வேண்டும் எனவும் அதற்கான செயல்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் எனவும் விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் தனது சிறப்புரையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் வேளாண் பட்டயப்படிப்பு தமிழ் வழியில் வழங்கவுள்ளது என்று கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தமது சிறப்புரையில் "இந்திய மொழிகளில் அறிவியல் கருத்துக்களை கொண்டு செல்வதில் தமிழ் மொழி முதன்மையானதாக மாற இந்த வேளாண் கலைக்களஞ்சிய பயிலரங்கத்தை நடத்தி வருகின்றோம். ஏற்கனவே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், தமிழ் இணையக் கல்விக் கழகமும் இணைந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்புக் கல்லூரி, இணைப்புக் கல்லூரிகளில் கணித்தமிழ் பேரவைகளை தொடங்கியுள்ளோம். இதன்மூலம் வேளாண் அறிவியலில் தமிழ்க் கட்டுரைகளை எழுதவும், தமிழ் வீக்கிபீடியாவில் பதிவேற்றம் செய்யவும் இளநிலை மாணவர்களைத் தயார்படுத்தியுள்ளோம்.

மேலும் எங்களது மாணவர்கள் 'உழவர்களுக்கான இயற்கை மொழியாய்வு, (Natural Language Processing), 'வேளாண் அலைபேசி செயலி உருவாக்கப் பயிற்சி' (Agri apps) பெற்றுள்ளனர். தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து 'உரையை எழுத்தாக மாற்றுதல்' (speech to text converter), 'இயந்திர மொழி பெயர்ப்பு', 'உழவர்களின் கேள்விகளுக்கு தமிழில் இயந்திர வழி பதில் சொல்லும் முறை' உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் சார்பில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேளாண் கட்டுரைகளை உருவாக்கியுள்ளன.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து 11,500 கட்டுரைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் பதிவேற்றம் செய்யப்பட உள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து தொடர்ந்து செயலாற்ற திட்டமிட்டு வருகின்றோம். கழனி உழவனுக்கு கணிணி வழி வேளாண்மையைக் கொண்டு செல்வதில் தமிழ் வீக்கிபீடியாவில் இப்பணி முக்கிய பங்கு ஆற்றி வருகின்றது.

முன்னதாக கோவை வேளாண் கிளைய தலைவர், முனைவர் ஏ. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தோட்டக்கலைக் கிளையக பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. இராஜாமணி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்